# ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழா காட்சிகள்!



சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று முன்தினம் (25.9.2025) ”கல்வியில் சிறந்த தமிழ்நாடு” என்னும் கருப்பொருளில் தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியினை கொண்டாடும் விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதற்காக வருகை தந்த தெலங்கானா முதலமைச்சர் அ. ரேவந்த் ரெட்டி அவர்களை, முதலமைச்சர் மு.க. ஸ்டாயின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வரவேற்றனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி , தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் உள்ளனர்.



சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று முன்தினம் (25.9.2025) நடைபெற்ற ”கல்வியில் சிறந்த தமிழ்நாடு” என்னும் கருப்பொருளில் தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியினை கொண்டாடும் விழாவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாணவிக்கு தனது பேனாவை பரிசாக வழங்கினார். உடன் இவ்விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தெலங்கானா முதலமைச்சர் அ. ரேவந்த் ரெட்டி அவர்கள் உள்ளார்.
























முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களும் நேற்று முன்தினம் (25.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழாவில் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்றி வரும் சமூக சிந்தனையாளர்கள், சிறப்பாகப் பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பயிற்றுனர்கள், கல்வி அமைப்புகளின் நிர்வாகிகள் ஆகியோரது சேவைகளை பாராட்டி சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் உள்ளனர்.